JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **73/2018** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 3** | Prosecution /Defence / Court | |
| Name | கவின்குமார் | Village | சென்னிமலை |
| Father's Name | சேகர் | Taluk | |
| | | Age | |

**A1 to A3 present**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 02.03.2026.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு பெட்சீட் கடைக்கு வேலைக்கு சென்று வருகிறேன். அ.சா.1 என் நண்பரின் தந்தை ஆவார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். வழக்கு சம்பந்தமாக சென்னிமலை காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தார். பார்வை மகஜரில் முதலாவதாக நானும், இரண்டாவதாக பாபுவும் சாட்சி கையொப்பங்களை செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சென்னிமலை காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார். மற்ற படி இந்த வழக்கைப் பற்றி எதுவும் எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் சாட்சி அ.சா. 3 பகுதி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டு அதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறது.**

1. 22.03.2016 ம் தேதி காலை 6.00 மணிக்கு எனக்கு தெரிந்த சேகர் வீட்டிற்கு முன்பு சென்ற போது அ.சா.1 ம் அவரது மனைவியும் கண்ணை கசக்கி

கொண்டிருந்தாகவும், கண் எறிகிறது என்று சத்தம் போட்டு கொண்டிருந்ததாகவும் அப்போது அடையாளம் தெரிந்த எதிரிகள் ராமசாமியும், அவரது மனைவி சரஸ்வதி, மணிவண்ணன் ஆகியோர்கள் நாமக்கல்பாளையம் செல்லும் ரோட்டில் ஓடி விட்டார்கள் என்றால் சரியல்ல அப்போது விசாரித்த போது அ.சா.1 ன் மனைவி லட்சுமி வாங்கி பணத்தை திருப்பி கொடுத்து விட்டு அ.சா.1 ம் லட்சுமியும் கொடுத்த டிவி மற்றும் கட்டிலை கேட்டதற்கு ராமசாமியும், அவரது மனைவி சரஸ்வதியும் பொருட்களை விற்று விட்டதாக சொன்னதாகவும், பொருளை கொடுக்காவிட்டால் லட்சுமி காவல் துறையில் புகார் கொடுப்பதாக சொன்னதாகவும் அதனால் மேற்படி சம்பவம் நடந்ததாக சொன்னார்கள் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் அ.சா.ஆ.3 ல் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனக்கு தெரிந்தவர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து விட்டு சம்பவ இடத்தில் கையெழுத்து செய்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை